1. நேஷன்ஸ் சிறுவர் கணக்கானது, பெற்றோர்/பாதுகாவலர்(களின்) அறிவுறுத்தலுக்கு இணங்க கணக்குப் புத்தகம் வழங்கப்படும் சேமிப்புக் கணக்காக மட்டுமே பிள்ளையின் பெயரில் திறக்கப்படுகிறது. அங்கீகாரமளிக்கப்பட்ட ஒரு தரப்பினரால் வங்கிக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டாலே தவிர, நேஷன்ஸ் சிறுவர் கணக்கு வைத்திருப்பவர் தொடர்ந்து பராயமடையாதவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது பற்றிக் கவனியாது, கணக்குத் திறக்கும் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெற்றோர்/ பாதுகாவலரிடமிருந்து பெறப்படுகின்ற அறிவுறுத்தல்களின்படி செயற்பட வங்கிக்கு உரிமை உண்டு.

2. எந்தப் பிள்ளையின் பெயரில் கணக்கு திறக்கப்பட்டுள்ளதோ அந்தப் பிள்ளை, கணக்கில் வரவு வைக்கப்படும் வைப்புத்தொகையின் பயனாளியாக இருக்க வேண்டும். எனவே, பிள்ளை பருவ வயதை அடையும் வரை கணக்கிலிருந்து பணம் எடுப்பதற்குப் பொதுவாக அனுமதிக்கப்பட மாட்டாது.

3. முதிர்வடையும் போது, கணக்கை வழக்கமான சேமிப்புக் கணக்காக மாற்றலாம். இருப்பினும், பயனாளி (பராயமடையாதவர்) புதிய சேமிப்புக் கணக்கு திறக்கும் படிவத்தை தேவையான சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் (தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு) பூர்த்தி செய்து வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். கணக்கு வழக்கமான சேமிப்புக் கணக்காக மாற்றப்பட்டதன் பிற்பாடு மற்றும் ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், இந்தக் கணக்கு தொடர்பாக பெற்றோர்/பாதுகாவலர்களால் செய்யப்படும் எந்தவொரு கோரிக்கையையும் வங்கி ஏற்காது.

4. நேஷன்ஸ் சிறுவர் கணக்கைத் திறப்பதற்கான குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை ரூ.500/- ஆகும். ஆயினும் இந்த தொகையை அவ்வப்போது மாற்றுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ரூ. 500/-க்கும் குறைவாக நிலுவையை வைத்திருக்கும் நேஷன்ஸ் சிறுவர் கணக்கை இரத்துச் செய்யும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

5. கணக்கைத் திறக்கும் சந்தர்ப்பத்தில், பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியை வங்கியின் பரிசோதனைக்காக சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், மேற்படி பிறப்புச் சான்றிதழின் நிழற் பிரதியை பதிவுக்காக வங்கி வைத்துக் கொள்ளும்.

6. நேஷன்ஸ் சிறுவர் கணக்கின் பயனாளி கணக்கு வைத்திருப்பவர் என்று அழைக்கப்படுவார். பிள்ளை மரணித்தால் அல்லது இயலாமைக்கு உள்ளானால், கணக்கின் கீழ் உள்ள பணம் பெற்றோர்/பாதுகாவலர்(களுக்கு) அல்லது வழக்கமான சேமிப்புக் கணக்காக மாற்றப்பட்ட கணக்கிற்குச் செலுத்தப்படும். ஏதேனும் ஒரு காரணத்துக்காக, கணக்கு வைத்திருப்பவர் 18 வயதை அடையும் முன் இந்தக் கணக்கை இரத்து செய்ய வேண்டி ஏற்பட்டால், ஏற்புடைய வட்டி விகிதம் வங்கியின் விருப்புரிமைப்படி தீர்மானிக்கப்படும்.

7. வைப்பில் இடுதல் மற்றும் பணம் மீளப் பெறுதல் இலங்கையில் அவ்வப்போது அமுலில் இருக்கும் சட்டங்களால் நிர்வகிக்கப்படும் என்பதுடன், ஆரம்ப வைப்புத்தொகையை வைப்புச் செய்த வங்கிக் கிளைக்கு அல்லது வங்கியின்

இன்ஸ்டோர் (In-store) பிரிவுக்கு மட்டுமே பணம் செலுத்தப்பட வேண்டும். வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆளடையாளச்சான்றுகள் சான்றுகள் சமர்ப்பிக்கப்படுவதற்கும் 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புக்கு உட்பட்டு இலங்கையில் உள்ள வேறு எந்தக் கிளையிலிருந்தும் பணத்தை மீளப் பெறுவதற்கு வங்கியானது, அதன் விருப்புரிமைப்படி அனுமதிக்கலாம்.

8. நேஷன்ஸ் சிறுவர் கணக்கிற்கு செலுத்த வேண்டிய வட்டி விகிதம் வங்கியால் தீர்மானிக்கப்படும் என்பதுடன். இலங்கையில் உள்ள அதன் பல்வேறு கிளைகள் மற்றும் இன்ஸ்டோர் (In-store) பிரிவுகளில் வங்கியால் அவை காட்சிப்படுத்தப்படலாம். மேற்படி வட்டி விகிதமானது கணக்கு வைத்திருப்பவருக்கு அல்லது கணக்குத் திறக்கும் படிவத்தில் பெயரிடப்பட்டுள்ள பெற்றோர்/பாதுகாவலர்(களுக்கு) அறிவித்தல் கொடுத்து திருத்தப்படலாம். நேஷன்ஸ் சிறுவர் கணக்குக்கான வட்டி நாளாந்தம் அல்லது வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற வேறொரு முறையில் (அதன் விருப்புரிமைப்படி) ஒன்று சேரும் என்பதுடன், அது மாதாந்த அடிப்படையில் நேஷன்ஸ் சிறுவர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

9. பிள்ளை 18 வயதை அடைவதற்கு முன், வங்கியின் விருப்புரிமைப்படி முக்கியமான தேவைகளுக்கு மட்டுமே கணக்கில் இருந்து பணம் மீளப் பெறுவதற்கு அனுமதிக்கப்படும்.

10. வங்கி அவ்வப்போது அதன்விருப்புரிமைப்படி , நேஷன்ஸ் சிறுவர் கணக்கு தொடர்பாக குறிப்பிட்ட வெகுமதிகளை மற்றும்/அல்லது சலுகைகளை வழங்க முடிவு செய்யலாம். எவ்வாறாயினும், அத்தகைய வெகுமதிகளை மற்றும்/அல்லது சலுகைகளை எந்த நேரத்திலும் அறிவித்தல் கொடுத்துவிட்டு இரத்து செய்வதற்கான, வாபஸ் பெறுவதற்கான அல்லது திரும்பப் பெறுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. நேஷன்ஸ் சிறுவர் கணக்கின் கீழ் வெகுமதிகளை அல்லது சலுகையைப் பெறுவதற்கான தகுதியை பூர்த்தி செய்யத் தவறியுள்ளமை கண்டறியப்பட்டால், நேஷன்ஸ் சிறுவர் கணக்கிலிருந்து ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள அத்தகைய வெகுமதியின் அல்லது சலுகையின் பெறுமதியை அல்லது விலையை எந்த நேரத்திலும் கணக்கில் இருந்து பற்று வைப்பதன் மூலம் அறவிடுவதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது.

11. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது நேஷன்ஸ் சிறுவர் கணக்கில் இணைக்கப்பட்டுள்ள ஏதும் சலுகைகளை எந்த நேரத்திலும் பெற்றோருக்கு/பாதுகாவலருக்கு(களுக்கு) எழுத்துப் பூர்வமாக அறிவிப்பதன் மூலம் மற்றும்/அல்லது உள்நாட்டு செய்தித்தாள்கள் மற்றும்/அல்லது வங்கிக் கிளைகளின் அறிவித்தல் பலகைகளில் அதைக் காட்சிப்படுத்துவதன் மூலம் வங்கி திருத்தலாம்.

12. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு இணங்க நிர்வகிக்கப்படும் . கணக்கு வைத்திருப்பவர் மற்றும் கணக்குத் திறக்கும் படிவத்தில் பெயரிடப்பட்டுள்ள பெற்றோர்/பாதுகாவலர்(கள்) இலங்கையின் சிவில் நீதிமன்றங்களின் நியாயாதிக்க அதிகார வரம்பிற்கு உட்படுவார்கள்.

13. நேஷன்ஸ் டிரஸ்ட் பேங்க் பீ.எல்.சீ. யின் மின்னணு டெல்லர் வசதி (“நேஷன்ஸ் குளோபல் கேஷ்”) அல்லது நேஷன்ஸ்

டிரஸ்ட் பேங்க் பீ.எல்.சீ. யின் இணைய வங்கிச் சேவையைப் (“நேஷன்ஸ் ஆன்லைன் பேங்கிங்”) பெற்றுக் கொள்வதற்காக பெற்றோர்/பாதுகாவலர்(கள்) விண்ணப்பித்தால் மற்றும் மேற்படி சேவை அவர்களுக்கு வழங்கப்பட்டால், அவர்கள் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படுவார்கள்:

I. நேஷன்ஸ் குளோபல் கேஷ் கணக்கு நிலுவைகளைப் பார்ப்பதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட முடியும். நேஷன்ஸ் சிறுவர் கணக்கு இருப்பைப் பார்ப்பதற்கு மட்டுமே “நேஷன்ஸ் ஆன்லைன் பேங்கிங்” வசதியைப் பயன்படுத்த முடியும்.

II. நேஷன்ஸ் குளோபல் கேஷ் / நேஷன்ஸ் ஆன்லைன் பேங்கிங் வசதியைப் பயன்படுத்துவதற்கான பயனர் பெயர் / கடவுச்சொல் / தனிப்பட்ட அடையாள எண் (PIN) கண்டிப்பாக இரகசியமாக பேணப்பட வேண்டும் என்பதுடன், எந்தச் சூழ்நிலையிலும் அல்லது எந்த காரணத்திற்காகவும் அவை யாருக்கும் தெரிவிக்கப்படமாட்டாது

III. நேஷன்ஸ் குளோபல் கேஷ் / நேஷன்ஸ் ஆன்லைன் பேங்கிங் வசதியைப் பயன்படுத்துவதோடு தொடர்புடைய அனைத்து சட்டப்பூர்வ கட்டணங்களும் (ஏதேனும் இருந்தால்) நேஷன்ஸ் சிறுவர் கணக்கில் பற்று வைக்கப்படும்.

IV. நேஷன்ஸ் டிரஸ்ட் பேங்க் பீ.எல்.சீ. யின் மின்னணு டெல்லர் கார்டு (“கார்டு”) திருடப்பட்டாலோ அல்லது தொலைந்து விட்டாலோ, பெற்றோர்/பாதுகாவலர்(கள்) உடனடியாக அது பற்றி வங்கிக்கு அறிவித்து, மற்றும் வங்கிக்கு எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்த வேண்டும். தொலைந்து போன, திருடப்பட்ட அல்லது பெற்றோர்/பாதுகாவலர்(களின்) அனுமதியின்றி எந்த கார்டையும் பயன்படுத்துவதால் ஏற்படும் இழப்புகளுக்கு வங்கி பொறுப்பாகாது.

V. நேஷன்ஸ் குளோபல் கேஷ் / நேஷன்ஸ் ஆன்லைன் பேங்கிங் வசதியைப் பயன்படுத்துவது தொடர்பாக கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை ஏற்காதமையினால் மற்றும்/அல்லது இணங்காமையினால் ஏற்படும் இழப்பை அல்லது சேதங்களை எந்தவொருகாரணத்திற்காகவும் வங்கி பொறுப்பேற்காது.

VI. நேஷன்ஸ் குளோபல் கேஷ் / நேஷன்ஸ்ஆன்லைன் பேங்கிங் வசதியைப் பயன்படுத்துவது வங்கியின் நடைமுறையில் உள்ள வழமையான வியாபார நிபந்தனைகளுக்கு உட்படும்.

VII. கணக்கு வைத்திருப்பவருக்கு மற்றும்/அல்லது பெற்றோருக்கு / பாதுகாவலருக்கு) அறிவித்து விட்டு நேஷன்ஸ் குளோபல் கேஷ் / நேஷன்ஸ் ஆன்லைன் பேங்கிங் வசதியை இரத்து செய்ய, வாபஸ் பெற அல்லது மாற்ற அல்லது அதனுடன் தொடர்புடைய சிறப்புரிமைகள் மற்றும் நிபந்தனைகளை அவ்வப்போது புதுப்பிக்க அல்லது மாற்ற அல்லது திருத்த வங்கிக்கு பூரண விருப்புரிமை உள்ளது.

பெற்றோர்/பாதுகாவலர்(கள்) நேஷன்ஸ் குளோபல் கேஷ் / நேஷன்ஸ் ஆன்லைன் பேங்கிங் வசதியின் பயன்பாட்டை நிறுத்த முடிவு செய்தால், பெற்றோர்/பாதுகாவலர்(கள்) வங்கிக்கு 7 நாட்களுக்குக் குறையாமல் எழுத்துப்பூர்வ அறிவிப்பைக் கொடுத்து உடனடியாக கார்ட்டை திருப்பியளிக்க வேண்டும் என்பதுடன் அதற்கான முறையான பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

VIII. கார்டுகளுடன் தொடர்புடைய அனைத்து மாற்றீடுகளும் புதுப்பித்தல்களும் தற்போது நடைமுறையில் உள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படும்.

நான் இத்துடன் விண்ணப்பித்துள்ள திட்டம்(கள்)/சேவை(களுக்கு) பொருந்தக்கூடிய நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியின் பொதுவான வியாபார நிபந்தனைகள் மற்றும் ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரதிகள் மேற்கூறிய பொருட்கள்/சேவை(கள்) தொடர்பான விவரங்களுடன் நான் இங்கு கையொப்பமிடுவதற்கு முன்னர் எனக்கு வழங்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது என்பதை நான் இத்தால் உறுதிப்படுத்துவதுடன், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விவரங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நான் நன்கு வாசித்துப் புரிந்து கொண்டேன் என்பதையும், அதற்குக் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.